Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

Calendar
Misscellancous
Preliminary Register
Sessions

**Case No. CC 62/2018**

Deposition of **PW1**

Prosecution
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சேகர் |
| Father's Name/Husband Name | : | த/பெ.வைரம் |
| Village | : | கல்லாத்துப்பட்டி |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th** Day of **October 2022.**

**திரு.சேகர்**

**முதல் விசாரணை**

நான் கல்லாத்துப்பட்டியில் குடியிருந்து ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன முருகன் எனக்கு தெரிந்தவர். 06.08.2017 ம் தேதி இரவு

சுமார் 7 மணியளவில் பாப்பிரெட்டிப்பட்டியில் இருந்து பெருமாள்பட்டிக்கு நானும் முருகன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்செல்ல முருகன் பின்னால் அமர்ந்து வந்தார். சிந்தல்பாடி ரயில்வே ஸ்டேசன் அருகே சென்றுகொண்டிருக்கும்போது எங்களுக்கு எதிரே வந்த டிராக்டர் எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி டிராக்டரை ஓட்டிவந்த நபரை நான் பார்க்கவில்லை. எனக்கு அடிப்பட்டு மயக்கமானதால் என்னால் அவரை பார்க்கமுடியவில்லை. விபத்தில் எனக்கு வலதுகால் எலும்பு முறிவு ஏற்பட்டது. நெற்றி மற்றும் கழுத்து, கண்ணில் இரத்தகாயம் ஏற்பட்டது. முருகனுக்கு விபத்தில் தலையின் பின்பக்கம் அடிப்பட்டு காது மற்றும் மூக்கில் இரத்தம் வந்தது. இந்த விபத்தில் சங்கர் என்பவருக்கும் தலையில் அடிப்பட்டது. அதன் பின்னிட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும் முருகன் மற்றும் சங்கரும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். முருகன் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். 3 நாட்கள் கழித்து முருகன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை தருமபுரி அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கபடும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சாலையின் ஓரத்தின் இரண்டு பக்கத்திலும் கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். விபத்தை நிறைய நபர்கள் பார்த்தார்கள். போலீசார் தருமபுரி அரசு மருத்துவமனையில் மறுநாள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யும்போது விபத்தை நிறைய நபர்கள் பார்த்தார்கள் என்ற விபரத்தை

சொன்னேன். விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் அங்கு யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு மயக்கமானதால் யார் யாருக்கு அடிப்பட்டது என்று தெரியாது என்றால் தெரியும். சங்கருக்கு மண்டையில் அடிப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தபோது சங்கருக்கு மண்டையில் மட்டும் அடிப்பட்டது என்று சொன்னேன் என்றால் சரிதான். சங்கருக்கு பக்கத்தில் யார் யார் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. சங்கர் என்பவர்தான் எங்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். நான் அளித்த புகார் வாக்குமூலத்திலும் சங்கர்தான் சிகிச்சையில் சேர்த்தார் என்று சொல்லியுள்ளேன். என் வாகத்தின் பதிவு எண் மற்றும் டிராக்டர் வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்று போலீசார் விசாரயையில் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் போலீசார் விசாரித்த பின்பு இந்த வழக்கு சம்மந்தமாக மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், பொய் புகாரின் அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

Calendar
Misscellancous
Preliminary Register
Sessions

**Case No. CC 62 / 2018**

Deposition of **PW2**

Prosecution
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பூவி |
| Father's Name/Husband Name | : | க/பெ.முருகன் |
| Village | : | துரிஞ்சிப்பட்டி |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th** Day of **October 2022.**

திருமதி. பூவி

**முதல் விசாரணை**

நான் துரிஞ்சிப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்த முருகன் என் கணவர் ஆவார். விபத்து ஏற்பட்ட தேதி மாதம் எனக்கு நியாபகம் இல்லை. என் நாத்தனார்

சத்யா விபத்து சம்மந்தமாக போனில் தகவல் சொன்னார். நான் என் கணவரை தருமபுரி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். அதன் பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் என் கணவரை சேர்த்தோம். விபத்து பாப்பிரெட்டிப்பட்டி அருகில் இருக்கும் ரயில்வே ஸ்டேசன் அருகே விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். விபத்து சமயத்தில் சேகர் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொள்ள என் கணவர் பின்னார் அமர்ந்து சென்றபோது டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். என் கணவருக்கு விபத்தில் பின்பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. என் கணவர் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். என் கணவரின் உடலை பிரேத பரிசோதனை செய்து கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் என் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC 62/2018** |
| Deposition of **PW3** | Prosecution<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சத்தியா |
| Father's Name/Husband Name | : | க/பெ.ஜெயராஜ் |
| Village | : | மொரப்பூர் |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th** Day of **October 2022.**

திருமதி.சத்தியா

**முதல் விசாரணை**

நான் மொரப்பூரில் குடியிருந்து தனியார் கம்பெணியில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்த முருகன் என் உடன் பிறந்த சகோதரர் ஆவார். தேதி மாதம் வருடம் நினைவில்லை. சுமார் 5

வருடங்களுக்கு முன்பாக சிந்தல்பாடி ரயில்வே ஸ்டேசன் அருகே விபத்து நடந்ததாக என் தம்பி முருகனுக்கு நான் போன் செய்தபோது என் தம்பி முருகனின் போனை அருகில் இருந்தவர்கள் எடுத்து அவருக்கு விபத்து நடந்துவிட்டதாக சொன்னார்கள். நான் சம்பவயிடத்திற்கு சென்றுபார்த்தபோது என் தம்பியை 108 ஆம்புலன்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டுசென்றுவிட்டார்கள். நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது சேகர் காலில் கட்டுப்போட்டிருந்தார். என் தம்பி தலையில் கட்டுப்போட்டிருந்தார். என் தம்பியை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சை பலன் இன்றி 3 நாட்கள் கழித்து என் தம்பி இறந்துவிட்டார். என் தம்பியின் உடலை பிரேத பரிசோதனை செய்து கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் என் தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**